# ஐசிஎப் உள்ளிட்ட 8 இரயில்வே உற்பத்தி பிரிவுகளை CPSE என்ற தனி நிறுவனமாக்கும் பாஜக மோடி அரசின்

# ரகசியம் அம்பலம் ! ஆபத்து !!

GOVERNMENT OF INDIA / भारत सरकार
CABINET SECRETARIAT / मंत्रिमंडल सचिवालय
RASHTRAPATI BHAVAN / राष्ट्रपति भवन

hairman, Railway Board
office No. 970629
9.9.2021

****

Subject: Rationalization of Government Bodies under the Ministry of Railways - reg.

Please find enclosed herewith a copy of Volume-II of the report prepared by Principal Economic Advisor, M/o Finance, Government of India on "Rationalisation of Government Bodies under M/o Railways."

(Niranjan C. Chandrashekhar)
Deputy Secretary
Ph. 23015881

**6. Production Units** *Strictly confidential and for internal circulation only*

Indian Railways has eight Production Units: three coach factories – Integral Coach Factory (ICF) Chennai, Rail Coach Factory (RCF) Kapurthala, Modern Coach Factory (MCF) Rae-Bareli; three locomotive manufacturing units – Chittaranjan Locomotive Works (CLW) Chittaranjan, Diesel Locomotive Works (DLW) Varanasi and Diesel Loco Modernisation Works (DMW) Patiala; and two Rail wheel units in Yelahanka (Bangalore) and Bela (Bihar).

We propose that one CPSE be established for Rolling Stock and manufacturing of Locomotives *(bringing all the 8 production units under its fold)*. This can be done by transferring the assets and deploying the employees of the existing Production Units to the proposed CPSE in a phased manner.

## ஒன்றுபட்டு போராடி முறியடிப்போம் !

## ICF UWU CITU கண்டன ஆர்பாட்டம்

## 21-10-2021 வியாழன் பகல் 11.36 ஷெல் ஸ்டோர் கேட்

## சிறப்புரை : தோழர் R.இளங்கோவன் துணைதலைவர் DREU-CITU

**ஒழித்துக்கட்டு அல்லது தாரைவார்த்துக் கொடு!**
**நிதியமைச்சகம் இரயில்வே வாரியத்திற்கு கிடுக்கிப்பிடி!**

நிதியமைச்சகத்தின் முதன்மைப் பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ்சன்யால் அரசு நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதற்கான பரிந்துரைகளை அரசிடம் சமர்ப்பித்துள்ளார். அதில், ரெயில்வே துறைக்கான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அமைச்சரவை செயலகம் இரயில்வே அமைச்சகத்திற்கு 9-9-2021 -ல் கடிதம் அனுப்பியுள்ளனர். அதில் ரெயில்வே வாரியத் தலைவர் ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதி அமைச்சரவை செயலகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அனுப்பும் அறிக்கையில் இரயில்வே மறுசீரமைப்பு குறித்து முதன்மைப் பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட வேண்டுமென கூறியுள்ளனர்.

**இரயில்வே மறுசீரமைப்பு (Rationalisation of Railway).**

இது இரயில்வே உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் ஒர்க்ஷாப் தொழிலாளர்கள் மீது தொடுக்கப்படும் மிகப்பெரிய தாக்குதல். பல இரயில்வே நிறுவனங்கள் மூடப்படும். RRBயை ஒழித்துக்கட்டுவது. ரெயில்வே பள்ளிகள், இரயில்வே மருத்துவமனைகள் மூடப்படும் அல்லது தனியாருக்கு தாரை வார்க்கப்படும். பல இரயில்வே நிறுவனங்களை ஒன்று இணைப்பது அல்லது ஒழித்துக்கட்டுவது என பல மோசமான பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளது. ரெயில்வே வாரிய இயக்குநரகங்கள் (Directorate) எண்ணிக்கையை குறைப்பது. உயரதிகாரிகள் மட்டத்திலும் ஆட்குறைப்பு, ரெயில்வே விஜிலென்ஸ் துறையிலும் ஆட்குறைப்பு என பல்வேறு நாசகர பரிந்துரைகளை சஞ்சீவ் சன்யால் அறிக்கையாக சமர்ப்பித்துள்ளார்.

**ஐசிஎப் உள்ளிட்ட இரயில்வே உற்பத்தி தொழிற்சாலைகள் பறிபோகும் நிலை**

COFMOW (central Organisation For Modernisation of Workshops) தற்போது இழுத்து மூடப்பட வேண்டுமென கூறியுள்ளது. புதியதாக CPSE (Central Public Sector Enterprises) என்ற பொதுத்துறை உருவாக்கப்பட்டு அதில் தற்போது இந்திய ரெயில்வேயில் உள்ள 8 உற்பத்தி தொழிற்சாலைகளும் அந்த CPSE ன் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். இந்திய ரெயில்வேயின் ICF, RCF, MCF, ஆகிய மூன்று கோச் உற்பத்தி தொழிற்சாலைகளும் அதேபோல் CLW, DLW, DLMW ஆகிய மூன்று லோகோ மோட்டிவ் உற்பத்தி தொழிற்சாலைகளும், பெங்களூர் மற்றும் பேலாவில் உள்ள இரண்டு இரயில் வீல் பேக்டரிகளும் CPSEன் கீழ் செயல்படவேண்டும்.

இரயில்வே உற்பத்தித் தொழிற்சாலைகளின் அனைத்து உள்கட்டுமானங்களும், சொத்துகளும் அனைத்து ரெயில்வே ஊழியர்களும் புதியதாக உருவாக்கப்படவுள்ள CPSEக்கு மாற்றப்படுவர். இரயில்வே ஊழியர் என்ற அந்தஸ்து பறிபோகும், பொதுத்துறைகளுக்கே உரித்தான கம்பெனி சட்டங்களே அமல்படுத்தப்படும். பழைய பென்சன்தாரர்கள், புதிய பென்சன்தாரர்கள் அனைவரின் எதிர்காலமும் கேள்விக்குறியாக மாறிவிடும். VRS என்ற பெயரில் கட்டாய ஓய்வில் ஊழியர்களை வெளியேற்ற திட்டமிடுவார்கள். கார்ப்பரேஷன் ஒர்க் ஆர்டர் இல்லாமல் குளோபல் டெண்டரை எதிர்நோக்கி படிப்படியாக நஷ்டத்தில் இயங்கும் நிலைக்குச் சென்று பங்கு விற்பனைகள் மூலமாக ஐ.சி.எப் உள்ளிட்ட 8 உற்பத்தி பிரிவுகளும் தனியார் வசம் ஒப்படைக்கப்படும்.

## இரயில்வே பள்ளிகள் மூடல்

இரயில்வே பள்ளிகள் அனைத்தையும் கேந்திரவித்யாலயாவுடன் இணைக்க வேண்டும் அல்லது அந்தந்த மாநில அரசு பள்ளிகளுடன் இணைக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது, இரயில்வே பள்ளிகளை நடத்துவது இரயில்வேரயில்வே நிர்வாகத்திற்கு கால விரயம் மற்றும் மிகப்பெரும் பண விரயம் ஏற்படுகிறது. இரயில் இயக்குதல் போன்ற அதிமுக்கிய (CORE) நடவடிக்கைகளை மட்டும் ரெயில்வே நிர்வாகம் கவனித்தால் போதுமென பரித்துரைக்கப்பட்டுள்ளது.

## இரயில்வே மருத்துமனைகள் தனியார்மயமாகும்

இந்தியரெயில்வே முழுவதும் 64 லட்சம் பயனாளிகள் ரெயில்வே ஊழியர்கள் அவர்களது பெற்றோர், ஓய்வுபெற்றோர் அவரைச் சார்ந்துள்ளோர், இரயில் விபத்துகளில் சிக்கும் பயணிகள் என பல்வேறு பயனாளிகள் இரயில்வே மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று பயன்பெறுகின்றனர். இந்திய ரெயில்வே முழுவதும் 123 ரயில்வே மருததுவமனைகளும் 588 ஹெல்த் யூனிட்களும் இந்திய இரயில்வேயின் 17 ஜோனல்கள் மற்றும் 5 உற்பத்தி தொழிற்சாலைகளிலும் செயல்படுகின்றது. இரயில்வே மருத்துவமனைகளுக்கு போதுமானநிதி ஒதுக்கீடு செய்ய இயலாமையால் தேவையான வசதிகள் இல்லையென முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ்சன்யால் கூறியுள்ளார். அதனால் இரயில்வே மருத்துவமனைகளை தரம் உயர்த்த தனியார் பங்கேற்பு நடவடிக்கை மூலமாக செயல்படுத்தப்பட்டு அதன் தரம் உயர்த்தப்பட வேண்டும் என பரிந்துரைத்துரைக்கப்பட்டுள்ளது. இரயில்வே மருத்துவமனைகள் இனி இரயில்வே கட்டுப்பாட்டில் இருக்காது தனியார் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதே இதன் சாராம்சம். தனியார் மருத்துவமனைகளாக முழுமையாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

## RRB-ஐ ஒழித்துக்கட்டத் திட்டம்

இந்திய இரயில்வேயிலுள்ள அனைத்து ஆர்.ஆர்.பி.களும் இழுத்து மூடப்பட வேண்டும். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே சந்தை என்ற சங்கிகளின் சர்வாதிகார எண்ணம்போல் இந்தியா முழுவதும் வேலைவாய்ப்புக்கு ஒரே தேர்வு. இனிமேல் நேஷனல் டெஸ்டிங் ஏஜென்சிதான் (National Testing Agency) இரயில்வே வேலைவாய்ப்புகான தேர்வை நடத்தும். இன்னும் துறைவாரியாக பல்வேறு நாசகர பரிந்துரைகள் முதன்மைப் பொருளாதார ஆலோசகரால் இரயில்வே வாரியத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றை அமல்படுத்துவதற்கு அமைச்சகம் விரைந்து நடவடிக்கை எடுக்கும். என்வே, தொழிலாளர்கள் மத்தியில் இதுகுறித்த விழிப்புணர்வை எற்படுத்தி ஒன்றுபட்டு போராட வேண்டும். ஒன்றுபட்டுப் போராடினால்தான் மோடி அரசின் கொள்கைகளை வீழ்த்தமுடியுமென தொழிலாளர்களும் அனைத்து தொழிற்சங்கங்களும், பெடரேசன்களும் போராட்டங்கள், பிரச்சாரங்களை ஒன்றிய அரசை நிர்ப்பந்திக்கும் வகையில், எழுச்சியோடு மேற்கொள்ள வேண்டும். இரயில்வே சொத்துக்களை விற்று பணமயமாக்கல் மற்றும் ஐ.சி.எப் உள்ளிட்ட 8 உற்பத்திபிரிவுகளை தனியார் மயமாக்கும் நாசகர "ரேஷனலைசேஷன்" பரிந்துரையை எதிர்த்து போராட்டங்களை மேற்கொள்வோம்.

**வரலாற்று சிறப்புமிக்க ஒன்று பட்ட போராட்ட வெற்றிக்கு உதாரணமான 1974 ரயில்வே வேலை நிறுத்தத்தை தலைமையேற்று நடத்தியது NCCRS (National Coordination Committee of Railwaymen's Struggle) என்ற ரெயில்வே தொழிலாளர்களின் தேசியபோராட்ட ஒருங்கிணைப்புகுழு. 2021 செப்டம்பர் மாதத்தில் DREU-CITU உள்ளிட்ட அனைத்து ரயில்வே தொழிற்சங்கங்களையும், அசோசியேஷன்ளையும். உள்ளடக்கி AIRF, NFIR தலைமையில் மீண்டும் NCCRS உருவாக்கப்பட்டு ஆக்டோபர் மாதத்திலிருந்து ஒன்றுபட்டு போராடுவோம் என்று அறை கூவல் விடுத்துள்ளது.**

**ஒன்றுபட்ட போராட்ட அறைகூவலை செயலாக்குவோம் ! போராடி முறியடிப்போம் !**

**இரயில்வே உற்பத்திபிரிவுகள் தனியார்மயமாக்கலை தகர்த்தெறிவோம் !!**

**ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் - சி.ஐ.டி.யு**

**ICF UWU - CITU**